*(AS. No.09 of 2019)*

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்.**

**முன்னிலை: திரு. C. சங்கர், B.A. M.L. PGDCFS.,**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, பெரியகுளம்.**

**2026 ம் ஆண்டு ஜீலை மாதம் 15– ஆம் நாள் புதன்கிழமை**

**மேல்முறையீட்டு வழக்கு எண்.09/2019**

**Against**

**அசல் வழக்கு எண். 300/2003**

**(CNR No. TNTH090000762019)**

1.M. ரவிக்குமார்
2.M. ஆவுடைத்தங்கம் (இறப்பு) ... மேல்முறையீட்டாளர்கள்/2, 8 பிரதிவாதிகள்

**//எதிர்//**

1. N முனியாண்டி ... 1 ம்எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி

2. M.முனியாண்டிபிள்ளை(இறப்பு) ... 2 ம் எதிர்மேல்முறையீட்டாளர்/1 ம் பிரதிவாதி

3. M.செந்தில்குமார் (இறப்பு)
4. M. பாலமுருகன் (Deleted)
5. R.அம்சவள்ளி (எ) பூங்கோதை (Deleted)
6. M.முத்துவேல் (Deleted)
7. M. சரோஜா(Deleted) ... 3 to 7 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/3 to 7 பிரதிவாதிகள்

*(AS. No.09 of 2019)*

8. R.அம்சவள்ளி (எ) பூங்கோதை
9. *S.லோகாம்மாள்*
10. M.முத்துவேல் (இறப்பு)
11. M. சரோஜா (இறப்பு)
12. S.கிருஷ்ணவேணி
13. வசுமதி
14. M.பாலமுருகன் ... 8 to 12 எதிர்மேல்முறையீட்டாளர்கள்/ 9 to 12 பிரதிவாதிகள்

(Amended as per the Order in I.A.No. 12 /2025, dated 20.01.2025)

(Amended as per the Order in I.A. No.7/2024, dated 15.07.2024)

(Amended as per the Order in I.A.No.153/2021, dated 12.07.2022)

**(இந்த மேல்முறையீடானது பெரியகுளம், சார்பு நீதிமன்றம் அசல் வழக்கு எண்.300/2003-ல் 25.01.2019-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் மேல் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீடு)**

O.S. No.300/2003

1.N.முனியாண்டி ... வாதி

//எதிர்//

1. M.முனியாண்டிபிள்ளை(இறப்பு)
2. M.ரவிக்குமார்
3. M.செந்தில்குமார் (இறப்பு)

4. M.பாலமுருகன் (Deleted)
5. R.அம்சவள்ளி (எ) பூங்கோதை (Deleted)
6. M.முத்துவேல் (Deleted)
7. M.சரோஜா (Deleted)
8. M.ஆவுடைத்தங்கம் (இறப்பு)
9. R.அம்சவள்ளி (எ) பூங்கோதை
10. S.லோகாம்மாள்
11. M.முத்துவேல்
12. M.சரோஜா(இறப்பு)
13. S.கிருஷ்ணவேணி ... பிரதிவாதிகள்

(Amended as per the Order in I.A.No. 12/2025, dated 20.01.2025)
(Amended as per the Order in I.A. No. 7/2024, dated 15.07.2024)
(Amended as per the Order in I.A. No.153/2021, dated 12.07.2022)

இம்மேல்முறையீடானது 15.07.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது மேல்முறையீட்டாளர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S.G. சுந்தர்ராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஞானகுருசாமி அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இன்று வரை இந்நீதிமன்ற சீரிய ஆய்வில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

*(AS. No.09 of 2019)*

**<u>தீர்ப்புரை</u>**

பெரியகுளம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 300/2003 – ல் 25.01.2019 – ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் மேல் குறையுற்ற பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேல்முறையீடு.

**2) <u>வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:</u>**

ஆறுமுகம் பிள்ளை, முத்துச்சாமி பிள்ளை, முத்துவேல் பிள்ளை ஆகியோர் சகோதரர்கள். அவர்களுக்கு சர்வே எண்.1041/1, மேல்மங்கலம் கிராமத்தில் சொத்து இருந்தது. அவர்கள் அவர்களது குடும்ப சொத்தை பாகம் பிரித்துக் கொண்டார்கள். ஆறுமுகம் பிள்ளைக்கு சர்வே எண்.1041/1–ல் 3 செண்ட் வடகிழக்கு ஓரத்தில் ஒதுக்கப்பட்டது. முத்துச்சாமி பிள்ளைக்கு அதற்கு அடுத்ததாக உள்ள சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது. மேற்கு பக்கம் உள்ள சொத்துக்கள் முத்துவேல் பிள்ளைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. வாதியின் தகப்பனார் ஆறுமுகம் பிள்ளைக்கு ராஜாத்தி என்ற மகள் இருந்தார். ஆறுமுகம் பிள்ளை, ராஜாத்தி அம்மாளை சேதுராமலிங்கம் பிள்ளைக்கு திருமணம் செய்து கொடுத்து அவர்களுக்கு சரோஜா என்ற மகளும் (12 ம் பிரதிவாதி) ராஜரீகம் மற்றும் ராஜபூபதி ஆகிய மகன்களும் வாரிசுகள், ராஜரீகமும், ராஜபூபதியும் சர்வே எண்.1041/1–ல் இருந்த 3 செண்ட் இடத்தை அவர்களது சகோதரி சரோஜாவுக்கு (12 ம் பிரதிவாதி) 12.09.1974 அன்று தான பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளனர். சரோஜா தான பத்திரத்தின் அடிப்படையில் 3 செண்ட்

இடத்தை பெற்று அனுபவித்து வந்தார். முத்துச்சாமி பிள்ளைக்கு 3 மகன்கள். 1ம் பிரதிவாதி முனியாண்டி பிள்ளை, 11ம் பிரதிவாதி முத்துவேல், மற்றும் சாந்தாபிள்ளை, 1966–ம் வருடம் அவர்கள் மூவரும் குடும்ப சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டனர். 1966–ம் வருடம் ஏற்பட்ட வாய்மொழி பாக பிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் 11ம் பிரதிவாதி முத்துவேலுக்கு 3 செண்ட் ஒதுக்கப்பட்டது. அந்த 3 செண்ட் என்பது 12ம் பிரதிவாதி சரோஜாவுக்கு ஒரு தான பத்திரம் எழுதி கொடுக்கப்பட்ட இடத்திற்கு மேற்கு பக்கம் ஆகும். வாய்மொழி பாகத்தைஉறுதிப்படுத்தும் விதத்தில் மூன்று சகோதரர்களும் ஒரு பாக பிரிவினை லிஸ்ட் எழுதிக் கொண்டனர். அதில் 3 சகோதரர்களும் கையெழுத்து செய்துள்ளனர். அந்த பாகப்பிரிவினை லிஸ்ட்டில் 11ம் பிரதிவாதிக்கு மட்டும் காலியிடம் சர்வே எண்.1041/1–ல் வழங்கப்பட்டுள்ளது. மற்ற சகோதரர்களுக்கு சர்வே எண்.1041/1–ல் வீடாக ஒதுக்கப்பட்டுள்ளது. நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் போது 11, 12 பிரதிவாதிகளின் சொத்துக்கள் சர்வே எண்.1041/1–ல் சேர்க்கப்பட்டது. 2, 3, 4 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மகன்கள். 9ம் பிரதிவாதி மகள். 11ம் பிரதிவாதி 12ம் பிரதிவாதியின் கணவர். நில உடமை மேம்பாட்டுத் திட்டத்தின் பொழுது சர்வே எண்.1041/1 Bk2.1776 சதுர அடி சர்வே எண்.1041/1Bk2 மேற்கு பக்கம் சர்வே எண்கள் 1041/1Bk1. முத்துவேல் பெயரில் உள்ளது. முத்துவேல், முத்துவேல் பிள்ளையின் பேரன் ஆவார். 11, 12 பிரதிவாதிகள் வழக்கு

சொத்துக்களுக்கு முழு உரிமையாளர்கள். 11ம் பிரதிவாதி மாவட்ட வருவாய் அலுவலராக பணிபுரிந்து சென்னையில் குடியேறிவிட்டார். 11, 12 பிரதிவாதிகள் செல்லையா பிள்ளை என்பவருக்கு 13.02.2002 அன்று ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள். வாதி செல்லையா பிள்ளையிடம் 28.02.2002 அன்று வழக்கு சொத்தை ரூ.1,19,000/–க்கு கிரையம் பெற்றுள்ளார். 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்துக்கு பொய்யாக சொந்தம் கொண்டாடுகின்றனர். 11.08.1996–ம் தேதியிட்ட பாக பிரிவினை லிஸ்ட்டில் 1ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.1041/1–ல் வீடு ஒதுக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதிக்கு எந்த காலியிடமும் எப்பொழுதும் ஒதுக்கப்படவில்லை. 11ம் பிரதிவாதிக்குத்தான்சர்வே எண்.1041/1–ல் காலியிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. 11ம் பிரதிவாதிக்கு சர்வே எண்.1041/1–ல் ஒதுக்கப்பட்ட காலியிடம் 11.08.1996–ம் தேதியிட்ட பாகபிரிவினை லிஸ்ட்C ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. 11.02.2003 அன்று வாதியும் அவரது குடும்பத்தாரும் திருச்செந்துார் கோவிலுக்கு சாமி கும்பிட சென்றுவிட்டு திரும்பி வந்தபோது 1 முதல் 3 பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்குள் அத்துமீறி சென்று தகர ஷெட் அமைத்துள்ளனர். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு வழக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லை. கிராமத்தில் உள்ள பெரியோர்கள் கூறியும் 1 முதல் 3 பிரதிவாதிகள் அந்த தகர ஷெட்டை அகற்ற மறுத்து விட்டனர். எனவே, வாதிகள் வழக்கை அனுமதிக்க வேண்டும்.

3) <u>1, 2, 8, 9, 10 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்:</u>

வாதியின் வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. வாதி வழக்கில் கண்டுள்ள சங்கதிகள் உண்மையில்லை. வாதி தாக்கல் செய்துள்ள கொடிவழி ஜாபிதா சரியானதல்ல. சர்வே எண்.1041/1 வடகிழக்கு மூலையில் 3 செண்ட் மனை ஆறுமுகம் பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பது உண்மையல்ல. 7ம் பிரதிவாதியின் சகோதரரான ராஜரீகம், ராஜபூபதி ஆகியோர்களுக்கும் ஆறுமுகம் பிள்ளை என்பருக்கும் வழக்கு சொத்தில் உரிமை இல்லை. ராஜரீகம், ராஜபூபதி 12.09.1974 அன்று 7ம் பிரதிவாதிக்கு தான பத்திரம் எழுதிக் கொடுத்ததாக சொல்வது உண்மை இல்லை. 1966–ம் வருடம் 1ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதி மற்றும் சாந்தாபிள்ளை ஆகியோர்களுக்கிடையே வாய்மொழி பாகப்பிரிவினை நடந்ததாகவும், அதில் 3 செண்ட் இடம் 6ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்வது உண்மையல்ல. 11.08.1996 அன்று பாகப்பிரிவினை சீட்டு எழுதிக் கொண்டதாக சொல்வது உண்மை இல்லை. 6ம் பிரதிவாதி முத்துவேல் (தற்பொழுது 11ம் பிரதிவாதி) வருவாய் கோட்டாட்சியராக பணியில் இருந்ததைப் பயன்படுத்தி சர்வே எண்.1041/1–ல் 1ம் பிரதிவாதிக்கு தெரியாமல் மோசடியாக உட்பிரிவு செய்யப்பட்டு முறைகேடாக பட்டா பெறப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு 1ம் பிரதிவாதி தனது சுவாதீனத்திலும் அனுபவத்திலும் தொடர்ந்து சட்ட காலத்திற்கு மேல் இருந்து வரும் வழக்கு சொத்தை

அபகரிக்கும் கெட்ட எண்ணத்துடன் வாதி அவரது உறவினர் செல்லையா பிள்ளை ஆகியோருடன் கூட்டு சேர்ந்து போலி ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளார். 6ம் பிரதிவாதி மோசடியாக சொத்துக்களை உட்பிரிவு செய்து கொண்டு பட்டா பெற்றுள்ளதை ரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிலுவையில் உள்ளது. 6, 7 பிரதிவாதிகள் (தற்பொழுது 11, 12 பிரதிவாதிகள்) 13.02.2002 அன்று செல்லையா பிள்ளை என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்திருப்பதாக கூறுவதை 1, 2 பிரதிவாதிகள் மறுக்கிறார்கள். வாதி 28.02.2002 அன்று வழக்கு சொத்தை 11, 12 பிரதிவாதிகளின் அதிகாரம் பெற்ற முகவரான செல்லையா பிள்ளை என்பவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளதையும் மறுக்கப்படுகிறது. எனவே, வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4) <u>6, 7 பிரதிவாதிகள் (தற்பொழுது 11, 12 பிரதிவாதிகள்) தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்:</u>

வாதி வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. 7ம் பிரதிவாதிக்கு (தற்பொழுது 12ம் பிரதிவாதிக்கு) 3 செண்ட் தான பத்திரம் மூலம் கொடுக்கப்பட்டது என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. 6ம் பிரதிவாதிக்கு (தற்பொழுது 11ம் பிரதிவாதிக்கு) 3 செண்ட் ஒதுக்கப்பட்டது என்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டது என்பது ஒப்புக் கொள்ளபடுகிறது. 4ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகன், 6,7

பிரதிவாதிகள் (11, 12 பிரதிவாதிகள்) 13.02.2002 அன்று செல்லையா பிள்ளை என்பவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளனர். வாதி செல்லையா பிள்ளையின் மருமகன். செல்லையாபிள்ளை வாதிக்கு 28.02.2007 அன்று வழக்கு சொத்தை கிரைய பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். செல்லையா பிள்ளை 6, 7 பிரதிவாதிகளுக்கு (11, 12 பிரதிவாதிகளுக்கு) கணக்குகளை முறையாக ஒப்படைக்கவில்லை. எனவே, வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் செல்லத்தக்கதல்ல. வாதி அவரது வழக்குரை 11 வது பத்தியில் கூறியுள்ளவை உண்மையில்லை. வாதி வழக்கு சொத்தை 1, 2 பிரதிவாதிகளிடமிருந்துதான் திரும்ப பெற முடியும். வாதிக்கு 6, 7 பிரதிவாதிகளிடமிருந்து (11, 12 பிரதிவாதிகள்) ரூ.1,19,000/- கிடைக்கத்தக்கதல்ல. எனவே, வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**5)** இந்த வழக்கில் 31.08.2004 அன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | **வழக்கு சொத்து 6, 7 பிரதிவாதிகளுக்கு (தற்பொழுது 11, 12 பிரதிவாதிகள்) பாத்தியப்பட்டிருக்கிறது என்று கூறுவது சரியா?** |
| 2. | **வாதி கேட்டுள்ள விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதா?** |
| 3. | **வாதி கேட்டுள்ள மாற்றுப்பரிகாரமான ரூ.1,19,000/- மற்றும் அதற்கு 12% வட்டியும் 6, 7 பிரதிவாதிகளிடமிருந்து (தற்பொழுது 11, 12 பிரதிவாதிகள்) கிடைக்கத்தக்கதா?** |

| | |
|---|---|
| 4. | **செல்லையா என்பவர் வழக்கின் அவசியமான தரப்பினரா?** |
| 5. | **வாதிகளுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் என்ன?** |

**6)** மேலும் இந்த வழக்கில் 03.11.2008 அன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | **வாதிகள் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் மற்றும் சுவாதீனம் பரிகாரம் கிடைக்கத்தக்கதா?** |
| 2. | **6, 7 பிரதிவாதிகளிடமிருந்து (11, 12 பிரதிவாதிகள்)வாதிக்கு ரூ.1,19,000/–மற்றும் வட்டி 12% கிடைக்கத்தக்கதா?** |
| 3. | **7ம் பிரதிவாதிக்கு (12ம் பிரதிவாதி) அவரது சகோதரர்கள் ராஜரீகம், ராஜபூபதி ஆகியோர்கள் 12.09.1976 அன்று செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுக்கவில்லை என்று 1ம் பிரதிவாதி கோருவது சரியா?** |
| 4. | **1ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதி அவர்களது சகோதரர்கள் சாந்தாபிள்ளை ஆகியோர்கள் 11.08.1996 அன்று பாகவிஸ்தி சீட்டு எழுதிக் கொண்டதாக கூறுவது சரியா?** |
| 5. | **6, 7 பிரதிவாதிகள் (11, 12 பிரதிவாதிகள்) மோசடியாக செல்லையா பிள்ளை என்பவருக்கு 13.02.2002 அன்று பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்திருப்பாக கூறுவது உண்மையா?** |
| 6. | **வாதிக்கு கிடைக்கத் தக்க வேறு பரிகாரம் என்ன?** |

*(AS. No.09 of 2019)*

**7)** இந்த வழக்கில் 24.01.2018 அன்று கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | **வாதிக்கு விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?** |
| 2. | **வாதிக்கு மாற்று பரிகாரமாக ரூ.1,19,000/- கிடைக்கத்தக்கதா?** |
| 3. | **11, 12 பிரதிவாதிகள் 13.02.2002 அன்று செல்லையா பிள்ளை என்பவருக்கு எழுதி கொடுத்த பவர் பத்திரம் செல்லத்தக்கதா?** |
| 4. | **வாதி, 11, 112 பிரதிவாதிகளின் பொது அதிகார முகவரான செல்லையா பிள்ளை வாதிக்கு 28.02.2002 அன்று எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் செல்லத்தக்கதா?** |
| 5. | **வாதிக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் என்ன?** |

**8)** இந்த வழக்கில் 18.07.2018 அன்ற கீழ்க்கண்ட கூடுதல் எழுவினா வனையப்பட்டுள்ளது.

| |
|---|
| **வழக்கு சொத்தில் எதிரிடை அனுபவம் (adverse possession) ஏற்பட்டுள்ளது என்று 2, 8 பிரதிவாதிகள் கூறுவது சரியா?** |

**9)** இருதரப்பும் கேட்கப்பட்டு இந்த வழக்கானது விசாரணை நீதிமன்றத்தில் தீர்ப்புரைக்காக ஒத்தி வைக்கப்பட் சூழ்நிலையில் மூன்று தேதிகளில் எழுவினாக்களும், ஒரு கூடுதல் எழுவினாவும் வனையப்பட்டுள்ளதால் இது சம்பந்தமாக இருதரப்பு வழக்கறிஞர்களிடமும் 24.01.2019 அன்று கேட்கப்பட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள எழுவினாக்கள் கீழ்க்கண்டவாறு திருத்தி வனையப்பட்டது.

(AS. No.09 of 2019)

**10) <u>திருத்தி வனையப்பட்ட எழுவினாக்கள்.</u>**

| | |
|---|---|
| 1. | **வழக்கு சொத்தை 1,2,8 பிரதிவாதிகள் தனித்த சுவாதீனத்தில் பகிரங்க அனுபவத்தில் நிராட்சேபணையாக தொடர்ந்து சட்ட காலத்திற்கு மேல் அனுபவித்து வருவதாக கூறுவது சரியா?** |
| 2. | **பிரதிவாதிக்கு அவரது சகோதரர்கள் ராஜரீகம், ராஜபூபதி 12.09.1976 அன்று செட்டில்மென்ட் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளதாக கூறுவது சரியா?** |
| 3. | **1ம் பிரதிவாதி 11ம் பிரதிவாதி மற்றும் சாந்தாபிள்ளை ஆகியோர் 11.08.1996 அன்று பாகவிஸ்தி சீட்டு எழுதிக் கொண்டதாக கூறுவது சரியா?** |
| 4. | **வழக்கு சொத்து 11, 12 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டிருந்தது என்று கூறுவது சரியா?** |
| 5. | **செல்லையா என்பவர் இந்த வழக்கின் அவசிய தரப்பினரா?** |
| 6. | **வாதி கேட்டுள்ள விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதா?** |
| 7. | **வாதி கேட்டுள்ள மாற்று பரிகாரமான ரூ.1,19,000/- மற்றும் அதற்கு 12% வட்டி 11, 12 பிரதிவாதிகளிடமிருந்து வாதிக்கு கிடைக்கத்தக்கதா?** |
| 8. | **வாதிக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரம் என்ன?** |

**11)** விசாரணை நீதிமன்றத்தில் வாதி தரப்பில் வாதி முனியாண்டி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ-1 முதல் வா.சா.ஆ-12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி

தரப்பில் 2ம்பிரதிவாதி ரவிக்குமார் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ–7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**12)** இந்த மேல்முறையீட்டு தரப்பினர்கள் அசல் வழக்கில் அழைக்கப்படுவது போலவே இம்மேல்முறையீட்டிலும் அழைக்கப்படுவர்.

**13) <u>Point for consideration are:</u>**

மேல்முறையீட்டிற்கான பின்வரும் விவகாரங்கள் தீர்வு காணப்பட்டுள்ளன:

**1.** 1ம் பிரதிவாதி, 11ம் பிரதிவாதி மற்றும் சாந்தாப்பிள்ளை ஆகியோர் 11.08.1996 அன்று பாகவிஸ்தி சீட்டு எழுதிக்கொண்டதாக கூறுவது சரியா?

**2** வாதி கேட்டுள்ள விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

**3** மேல்முறையீட்டாளர்/வாதிகள் கூடுதல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளத் தாக்கல் செய்த IA.No.24/20–ஆவது மனுவை அனுமதிக்கலாமா?

**4** மேல்முறையீட்டை அனுமதிக்கலாமா?

**5.** மேல்முறையீட்டாளர்களுக்கு வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது?

**14)** POINT No. 1 and 2

**i)** இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. விசாரணை நீதிமன்ற வழக்கின் வாதியும், இம்மேல்முறையீட்டின் எதிர்மனுதாரரான முனியாண்டி என்பவர் தாக்கல் செய்துள்ள பிராதின் 7 வது பாராவில் முத்துச்சாமி பிள்ளைக்கு 3 மகன்கள் இருந்தனர்., 1 வது பிரதிவாதி திரு. முனியாண்டிப்பிள்ளை, 11 வது பிரதிவாதி திரு.முத்துவேல் மற்றும் திரு. சாந்தப்பிள்ளை ஆகியோர் 1966 ஆம் ஆண்டில், அவர்கள் தங்கள் குடும்பச் சொத்துக்களை வாய்மொழியாகப் பிரித்துக்கொண்டனர். மேலும் அந்த பிராதில் கூறியிருப்பதாவது,

> "… Ever since the date of partition, the parties were enjoying their respective shares. A part from S.No. 1041/1, the family consisting of 1st, 11th defendants and Santhapillai was owing other properties. During 1966, the brothers orally partitioned all the family properties. In that oral partition 11th defendant was allotted 3 cents west of 3 cents settled upon Soraja, the 12th defendant. Since a document was required for convenient enjoyment of their respective moieties. (dt. 11.08.1996) All the 3 brothers had executed a partition list evidence the respective motives given to the brothers in oral partition during

> 1966. All the 3 brothers signed the document. As per partition list 11th defendant alone was given vacant site in S.No. 1041/1. Other brothers are given building in S.No. 1041/1...”

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்ற தீர்ப்பில்,

> " ... சர்வே எண் 455/1பி 1ம் பிரதிவாதி முனியாண்டி பிள்ளைக்கு குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையின்படி கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 கிரைய பத்திரம் 12.8.1996 அன்று எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 கிரைய பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தின் மூலமாக 1ம் பிரதிவாதி முனியாண்டி பிள்ளைக்கு வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் சர்வே எண் 465/1பி– ல் உள்ள சொத்துக்கள் ஒதுக்கப்பட்டள்ளது என்பதை அறிய முடிகிறது. வா.சா.ஆ.7 ஒத்திப்பத்திரம் 12.9.1977 அன்று எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஒத்திப் பத்திரத்தை முத்துச்சாமிபிள்ளையின் மகன் 12ம் பிரதிவாதி முத்துவேல் எழுதிக் கொடுத்துள்ளாார். வா.சா.ஆ.7 ஒத்திப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண் 1050/1சி சொத்தானது குடும்பத்தில் ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின் மூலமாக கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வா.சா.ஆ.6 கிரைய பத்திரம் மற்றும் வா.சா.ஆ

7 ஒத்திப் பத்திரம் ஆகியவற்றினை பரிசீலிக்கும்போது 1977 க்கு முன்பாக வா.சா.ஆ.1 கொடிவழி ஜாபிதாவில் குறிப்பிடப்பட்டுள்ள முத்துச்சாமி பிள்ளையின் மகன்களான 1ம் பிரதிவாதி முனியாண்டி பிள்ளை மற்றும் சாந்தா பிள்ளை மற்றும் 11ம் பிரதிவாதி முத்துவேல் பிள்ளை ஆகியோர்களுக்கு இடையே வாய்மொழி பாகம் ஏற்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது..."

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி தீர்ப்புரையில்,

"... வா.சா.ஆ.8 ஆவணம் தலைப்பில் பாகப்பிரிவினைப் பத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 ல் முதல் பத்தியிலும், கடைசியிலும் பாகபிரிவினை தஸ்தாவேஜு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வா.சா.ஆ .8 ஆவணத்தில் இரண்டாவது பத்தியில் 1ம் பிரதிவாதி முனியாண்டிபிள்ளை அவரது சகோதரர் சாந்தாபிள்ளை 12ம் பிரதிவாதி முத்துவேல் பிள்ளை ஆகியோர் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் ஊரில் உள்ள மத்தியஸ்தர்கள் முன்னிலையில் அவரவர் குடும்ப அபிவிருத்தியை முன்னிட்டு அடியில் கண்ட பிரகாரம் "பாகப்பிரிவினை " செய்து 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தனித்தனியே சொத்துக்களை அனுபவித்து தானாதிவினைய விக்கிரயங்களுக்கு உட்படுத்தி அவரவர் பெயரில் பதிவு செய்து சுதந்திரமாய் ஆண்டு அனுபவித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வா.சா.ஆ.8 ஆவணத்தின் "2 வது பத்தியை பரிசீலித்தபோது "வா.சா.ஆ.8 ல் 30 ஆண்டுகளுக்கு முன்பாக பாகப்பிரிவினை செய்து

கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.8 ஆவணம் 11.8.1996 ம் தேதியிட்டதாக உள்ளது. பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் தமது வாதத்தில் வா.சா.ஆ.8 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்று வாதிடப்பட்டது. வா.சா.ஆ.8 ஆவணம் பதிவு செய்யப்படவில்லை. வா.சா.ஆ.8 ஆவணம் ஜெராக்ஸ் நகல்தான். வா.சா.ஆ.8 ஆவணத்தின் அசலை 2,8,11,12 பிரதிவாதிகள் தாக்கல் செய்யக் கோரி வாதி தரப்பில் 5.1.2018 அன்று மெமோ தாக்கல் செய்யப்பட்டும் 2,8 பிரதிவாதிகள் தரப்பில் அவ்வாறு அசல் ஆவணத்தை மறுத்து கடுமையான ஆட்சேபணை தெரிவித்து ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டள்ளது." 11,12 பிரதிவாதிகள் ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை, அதன்பிறகு 11, 12 பிரதிவாதிகள் இந்த வழக்கு விசாரணைக்காக ஆஜராகாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக உத்தரவிடப் பட்டுள்ளது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் 2 வது பத்தியில் 30 ஆண்டுகளுக்கு முன்பாக "பாக பிரிவினை" செய்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி அவரது முதல் விசாரணையில் வழக்கு சொத்தின் பாதி விஸ்தீரணம் முத்தச்சாமி பிள்ளையின் 3 மகன்களான 1ம் பிரதிவாதி முனியாண்டி பிள்ளை, சாந்தா பிள்ளை மற்றும் 12ம் பிரதிவாதி முத்துவேல் பிள்ளை ஆகியோர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்மொழி பாக பிரிவினையின் அடிப்படையில் 11ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டதாக கூறியுள்ளார். வா.சா.ஆ.6 கிரைய பத்திரம் 1ம் பிரதிவாதி முனியாண்டி பிள்ளை மற்றும் அவரது மூன்று மகன்கள் எழுதிக் கொடுத்துள்ளனர். வா.சா.ஆ.6 ஐ 2ம் பிரதிவாதி ரவிக்குமாரும் சேர்ந்துதான் எழுதிக் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.6 கிரைய பத்திரம் 12.8.1996 ம் தேதியிட்டு

**எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தில் 1ம் பிரதிவாதி குடும்பத்தில் ஏற்பட்ட "வாய்மொழி பாக பிரிவினையின்படி" தனக்கு கிடைத்ததாக கூறப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஒத்திப்பத்திரத்தை 12ம் பிரதிவாதி முத்துவேல் பிள்ளை 12.9.1977 அன்று எழுதிக் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.7 ஒத்திப்பத்திரத்தில் குடும்பத்தில் ஏற்பட்ட "வாய்மொழிபாகத்தின் படி" தனது பாகத்திற்கு கிடைத்ததாக கூறியுள்ளார். வா.சா.ஆ.11 ஈடுகடன் பத்திரத்தை 12ம் பிரதிவாதி முத்துவேல் பிள்ளை 16.3.1978 அன்று எழுதிக் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.11 ஈடுகடன் பத்திரத்தில் குடும்பத்தில் "ஏற்பட்ட வாய்மொழி பாகத்தின்படி" தனது பாகத்திற்கு கிடைத்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது..."**

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி, விசாரணை நீதிமன்ற தீர்ப்புரையில்,

**"... வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தில் 1ம் பிரதிவாதி முனியாண்டி பிள்ளை தனக்கு வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் கிடைத்த சொத்தை கிரையம் கொடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 ஒத்திப் பத்திரத்தில் 12ம் பிரதிவாதி முத்துவேல் பிள்ளை தனக்கு வாய்மொழி பாகத்தின் அடிப்படையில் கிடைத்த சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வா.சா.ஆ.6 கிரைய பத்திரம், வா.சா.ஆ.7 ஒத்திப் பத்திரம் மற்றும் பி.வா.சா.ஆ.6 கிரைய பத்திரம் ஆகிய மூன்றையும் சேர்த்து பரிசீலித்தபோது வா.சா.ஆ.1 கொடிவழி ஜாபிதாவில் குறிப்பிடப்பட்டுள்ள முத்துச்சாமி பிள்ளையின் மூன்று**

**மகள்களான 1ம் பிரதிவாதி முனியாண்டி பிள்ளை அவரது சகோதரர் சாந்தாபிள்ளை மற்றொரு சகோதரரான 12ம் பிரதிவாதி முத்துவேல் பிள்ளை ஆகியோர்களுக்கிடையே வாய்மொழி பாக பிரிவினை நடந்துள்ளது என்றே இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. எனவே 12ம் பிரதிவாதி முத்துவேல் பிள்ளைக்கு வாய்மொழியாக பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது ..."**

**ii)** விசாரணை நீதிமன்ற வழக்கின் பிராதில் வாதி தெரிவித்துள்ளது போல் வா.சா.ஆ.6, வா.சா.ஆ.7, வா.சா.ஆ.11 ஆகிய ஆவணங்களில் 30 வருடங்களுக்கு முன்னர் வாய்மொழியாக பிரிவினை செய்யப்பட்டதின் படி சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும், அந்த வாய்மொழி பாகப்பிரிவினையை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டே வா.சா.ஆ.8 பாகப்பிரிவினை சீட்டு (Partition list) பிறப்பிக்கப்பட்டதாக தெரிவித்து வா.சா.ஆ.8 ஆவணம் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆவணத்தில் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டதாக எந்தவொரு சங்கதியும் குறிப்பிட்டு கூறப்படவில்லை. வா.சா.ஆ.8 ஆவணத்தின் படியே 11ம் பிரதிவாதி செல்லையாப்பிள்ளை என்பவருக்கு பவர் ஆவணம் பிறப்பித்துக் கொடுத்து அந்த பவர் ஆவணத்தின் அடிப்படையில் வாதி கிரையம் பெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.8ல் சங்கதிகள் இதன் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது,

*(AS. No.09 of 2019)*

**<u>பாகப்பிரிவினைப்பத்திரம்</u>**

**"... 1996ம் வருடம் ஆகஸ்ட் மாதம், 11ம் தேதி தமிழ் தாது வருடம் ஆடி மாதம் 27ம் தேதி, மதுரை மாவட்டம் பெரியகுளம் தாலுகா மேல்மங்கலம் கிராமம், வடுகபட்டியில் இருக்கும் காலஞ்சென்ற கு.முத்துச்சாமிப்பிள்ளை குமாரர்கள் மேற்படி வடுகப்பட்டியிலிருக்கும் முனியாண்டிபிள்ளை –1, மேற்படி வடுகப்பட்டியில் வசிக்கும் மு.சாந்தாப்பிள்ளை –2, சென்னை, கொரட்டுர் பெரியார் நகர் 13 வது தெரு, பிளாட் எண்.291ல் வசிக்கும் ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி மு. முத்துவேல் – 3, இந்த மூன்று பேர்களும் செய்து கொண்ட பாகப்பிரிவினை தஸ்தாவேசு.**

**1963ம் வருடம் மே மாதம் 20ம் தேதி மேற்கண்ட மூன்று நபர்களின் பெயரியப்பா, சித்தப்பா அவர்களின் வாரிசுகளுக்குள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினைப்படி மேற்கண்ட 3 நபர்களுக்கும் கிடைக்கப்பெற்ற சொத்துக்களை சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் ஊரில் உள்ள சில மத்தியஸ்தர்கள் முன்னிலையில் அவரவர் குடும்ப அபிவிருத்தியை முன்னிட்டு அடியிற்கண்ட பிரகாரம் பாகப்பிரிவினை செய்து 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்து தனித்தனியே சொத்துக்களை அனுபவித்து தானாதி வினய விக்கிரயங்களுக்கு உட்படுத்தி அவரவர் பெயர்களில் பதிவு செய்து, சுதந்திரமாய் ஆண்டு அனுபவித்து தனித்தனிக் குடும்பமாய் இருந்து வருகிறோம்.**

**அடியிற்கண்ட சொத்துக்கள் சிலவற்றில் கூட்டுப்பட்டவாக இருந்து வருவதாலும், மேலும் அடமானம், விற்பனை முதலியன ஏற்படுத்தும் பொழுது சில சிரமங்கள் ஏற்படுவதாலும், பிற்காலத்தில் பிரச்சனை ஏதும் எழாமல் சுமூகமாக வாழவும், மத்தியஸ்தர்கள் மூலம் ஏற்படுத்திய <u>எழுத்து மூலமான பாகப்பிரிவினைப் பத்திரம்</u> தற்சமயம் கிடைக்கப்பெறாததாலும் ஊரிலுள்ள**

**பெரிய மனிதர்கள் முன்னிலையில் அவரவர் அனுபவித்து வரும் சொத்துக்களுக்கு எழுத்து மூலம் ஆதாரம் கொடுக்க இந்தப்பாகப் பிரிவினையில் அடங்கிய சில சொத்துக்களை ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்ட பிறகு, பங்குதாரர்கள் சிலர் கிரயம் செய்துவிட்டதால் அவற்றை இந்தப் பாகப்பிரிவினைப் பத்திரத்தில் சேர்க்கப்படவில்லை. இதன்படி அவரவர் ஏற்கனவே செய்துகொண்ட பாகப்பிரிவினைப் படி அனுபவித்து தானாதி வினய விக்கிரயங்களுக்கு உரியதாய், பட்டா மற்றும் அலுவலக தஸ்தாவேஜீகளில் மாற்றங்கள் செய்து கொள்ளவும், ஒருவர் அனுபவிக்கும் சொத்தில் மற்றவர் எம்முறையிலும் தலையிடாது அமைதியாக வாழ இதன்மூலம் ஒப்புக்கொள்ளுகிறோம். பிற்காலத்தில் பட்டாமாற்றம், கிரயம் முதலியன ஏதேனும் ஏற்பட ஒருவருக்கொருவர் ஒப்பம் இட்டு தடங்கல் ஏதும் செய்ய வகை செய்ய மாட்டோம் என்று ஒப்புக்கொள்கிறோம்.**

**இப்பாகப்பிரிவினையின் படி "ஏ" இலக்க சொத்துக்கள் திரு.மு.முனியாண்டிப்பிள்ளை சுதந்திரமாய் தானாதி வினய விக்கிரயங்களுக்கு உட்படுத்தி அனுபவித்துக் கொள்ளவேண்டியது.**

**"பி" இலக்க சொத்துக்களை திரு.மு.சாந்தாப்பிள்ளை சுதந்திரமாய் தானாதி வினய விக்கிரயங்களுக்கு உட்படுத்தி அனுபவித்துக் கொள்ளவேண்டியது.**

**"சி" இலக்க சொத்துக்களை திரு. மு.முத்துவேல் சுதந்திரமாய் தானாதி வினய விக்கிரயங்களுக்கு உட்படுத்தி அனுபவித்துக் கொள்ளவேண்டியது.**

**இதற்கு முன்னமேயே நாம் மேற்படி சொத்துக்களையும் ஜங்கம சொத்துக்களையும் பாகம் செய்துகொண்டு தனித்தனி குடும்பமாக ஆக்கிகொண்டதால் நமக்குள் உயிர் சொந்தமே ஒழிய பொருள் சொந்தமில்லை என்று நல்ல எண்ணத்துடன் பாகப்பிரிவினை செய்து கொண்டோம்..."**

*(AS. No.09 of 2019)*

**iii)** மேற்படி ஆவணத்தில் "1963 ம் வருடம் மே மாதம் 20 ம் தேதி முத்துச்சாமி பிள்ளை குமாரர்கள் முனியாண்டிபிள்ளை 1 , சாந்தா பிள்ளை 2, முத்துவேல் 3, ஆகிய 3 பேரும் செய்து கொண்ட பாகப்பிரிவினை தஸ்தாவேஜ் என்று குறிப்பிட்டு" மேற்கண்ட 3 நபர்களின் பெரியப்பா, சித்தப்பா அவர்களின் வாரிசுகளுக்குள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினைப்படி மேற்கண்ட 3 நபர்களுக்கும் கிடைக்கப் பெற்ற சொத்துக்களை சுமார் 30 வருடங்களுக்கு முன் ஊரில் உள்ள சில மத்தியஸ்தர்கள் முன்னிலையில் அவரவர் குடும்ப அபிவிருத்தியை முன்னிட்டு அடியில் கண்ட பிரகாரம் பாகப்பிரிவினை செய்து 30 வருடங்களுக்கு முன்பிருந்து தனித்தனியே சொத்துக்களை அனுபவித்து வந்ததாக கூறப்பட்டுள்ள நிலையில் வாய்மொழி பாகப்பிரிவினையின் படி சொத்துக்களை பாகப்பிரிவினை செய்து கொடுத்ததாக எந்தவொரு சங்கதியும் குறிப்பிட்டுக் கூறப்படாத நிலையில் வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 1966 ம் வருடம் 1ம் பிரதிவாதி, 11ம் பிரதிவாதி மற்றும் சாந்தா பிள்ளை ஆகியோர்களுக்கிடையே வாய்மொழி பாகம் நடந்ததாக முன்னுக்குப் பின் முரணாக சங்கதி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்கூறிய வா.சா.ஆ.8 ஆவணத்தில் **சுமூகமாக வாழவும் மத்தியஸ்தர்கள் மூலம் ஏற்படுத்திக் கொண்ட எழுத்து மூலமான பாகப்பிரிவினைப் பத்திரம் தற்சமயம் கிடைக்கப்பெறாததாலும்** என்று தெரிவிக்க்ப்பட்டுள்ளது. இதன்மூலம் வாதி வழக்குரையில் தெரிவித்துள்ளது போல் 30 வருடங்களுக்கு முன்னர் 1 ம்

*(AS. No.09 of 2019)*

பிரதிவாதி, 11ம் பிரதிவாதி மற்றும் சாந்தாப்பிள்ளை ஆகியோர்களின் குடும்பங்களுக்குள் வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றும், ஏற்கனவே எழுத்து மூலமான பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்றும், தெரிய வருகிறது. இந்நிலையில் 30 வருடங்களுக்கு முன்னர் ஏற்கனவே எழுத்து மூலமான பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தும், அந்த சங்கதியை மறைத்து வாதி தரப்பில் வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெற்றதாக முன்னுக்குப் பின் முரணாகவே தெரிவிக்கப்பட்டுள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரை சங்கதிகளை வாதியே மெய்ப்பிக்கும் சுமை வாதிக்கு இருந்து வருகிறது. இந்த சூழ்நிலையில் வாதி வழக்குரையில் தெரிவித்துள்ள சங்கதி வா.சா.ஆ.8 ஆவணத்திற்கு முரணாக இருந்து வருகிறது எனவும், எனவே வாதி ஆவண முரண் தடை (Estoppel by deed) என்ற தோசத்தினால் தடைப்பட்டுள்ளார் என்று எடுத்துரைத்த மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றிந்த வழக்கறிஞரின் வாதம் ஏற்கத்தகுந்ததாகவே உள்ளது. எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின்போது வா.சா.ஆ.8 ஆவணம் பாகப்பிரிவினைப் பத்திரம் என்று தலைப்பிடப்பட்டிருந்தாலும், மேற்படி வா.சா.ஆ.8 ஆவணம் பாகப்பிரிவினை சீட்டு (Partition List) என்றும், ஏற்கனவே 30 வருடங்களுக்கு முன்னர் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டதை ஊர்ஜீதம் செய்யும் வகையில் எழுத்து மூலமான ஆவணம் தேவைப்பட்டதாக கருதியே வா.சா.ஆ.8

*(AS. No.09 of 2019)*

ஆவணம் பிறப்பிக்கப்பட்டது என்று எடுத்துரைத்தார். எதிர்மேல்முறையீட்டாளர்/வாதி தரப்பில் எடுத்துரைத்த கற்றறிந்த வழக்கறிஞரின் வாதத்தின் படி ஏற்கனவே வாய்மொழி பாகப்பிரிவினை நடந்ததை அனுசரித்து பாகப்பிரிவினை சீட்டு (Partition List) எழுதிக் கொள்வதில் எவ்வித ஆட்சேபனையும் இருந்து வரவில்லை என்று தெரிவித்த வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கது என இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆனால் இவ்வழக்கை பொறுத்தமட்டில் வா.சா.ஆ.8 ஆவணத்திலேயே ஏற்கனவே 30 வருடங்களுக்கு முன்னர் எழுத்து மூலமான பாகப்பிரிவினை மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டுக் கூறியுள்ள நிலையில் வா.சா.ஆ.8 ஆவணத்தை பாகப்பிரிவினை சீட்டாக கருத முடியாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. வா.சா.ஆ.8 ஆவணம் குறித்து மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையின்போது, வா.சா.ஆ.8 பாகப்பிரிவினை பத்திரம் என்றும், பாகப்பிரிவினை சீட்டு (Partition List) அல்ல என்றும், வா.சா.ஆ.8 வழக்கிற்காக மோசடியாக உருவாக்கப்பட்டுள்ளது என்றும், வா.சா.ஆ.8 ல் 2ம் பிரதிவாதியின் தகப்பனாரான 1ம் பிரதிவாதி முனியாண்டி கையெழுத்து செய்யவில்லை என்றும், எடுத்துரைத்தார். வா.சா.ஆ.8 ஆவணத்தின் படி ஏற்கனவே எழுத்துமூலமான பாகப்பிரிவினை ஏற்பட்டு அந்த பாகப்பிரிவினை ஆவணம் தற்சமயம் கிடைக்கப்பெறாததால் மீண்டும் அவரவர் அனுபவித்து வரும் சொத்துக்களுக்கு எழுத்து மூலம் ஆதாரம்

கொடுக்க இந்த பாகப்பிரிவினை எழுதப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**iv)** ஏற்கனவே 30 வருடங்களுக்கு முன்னர் எழுத்து மூலமான பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ள நிலையில், அந்த பாகப்பிரிவினை ஆவணம் என்ன ஆனது என்பது குறித்து வாதி தரப்பில் எவ்வித விளக்கமும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. ஏற்கனவே 30 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த எழுத்து மூலமான பாகப்பிரிவினையில் யார் யாருக்கு எவ்வளவு சொத்துக்கள் மற்றும் என்ன என்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டன என்பது குறித்து வாதி தரப்பில் எவ்வித விளக்கமும் காரணமும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. அதன்பிறகு வா.சா.ஆ.8 ஆவணத்தில் மேற்படி ஆவணத்தின் அசல் ஆவணம் யார் வசம் இருந்து வர வேண்டும் என்று எவ்வித சங்கதியும் குறிப்பிடவில்லை. மேற்படி வா.சா.ஆ.8 ஆவணம் xerox நகலாக இருந்து வருகிறது. இந்நிலையில் அசல் ஆவணம் இருக்கும் பட்சத்திலேயே xerox ஆவணம் நகல் எடுக்க முடியும் என்ற நிலையில், அசல் ஆவணம் குறித்து வா.சா.ஆ.8 ஆவணத்தில் குறிப்பிடாத நிலையிலும், வா.சா.ஆ.8 ஆவணம் உண்மையிலேயே 1, 11ம் பிரதிவாதிகள் மற்றும் சாந்தாபிள்ளை ஆகியோர்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் தானா என்பது குறித்து மேற்படி வா.சா.ஆ.8 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள சாட்சிகளை வாதி தரப்பில் விசாரித்து மேற்படி ஆவணத்தின்

உண்மை தன்மை குறித்து வாதி தரப்பில் நிரூபிக்கவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வா.சா.ஆ.8 ஆவணத்தில் முதல் பக்கம் இருந்து வராமல் 2வது பக்கத்தில் இருந்தே ஆரம்பமாகிறது. அவ்வாறு வா.சா.ஆ.8 ஆவணத்தில் 2 மற்றும் 3 வது பக்கங்களில் உள்ள தட்டச்சு செய்யப்பட்ட வாசகங்கள் அளவில் சிறியதாகவும், 4 முதல் கடைசி பக்கம் வரை தட்டச்சு செய்யப்பட்ட வாசகங்கள் அளவில் பெரியதாகவும் இருந்து வரும் நிலையில், வா.சா.ஆ.8 ஆவணம் உண்மையில் 1, 11 ம் பிரதிவாதிகள் மற்றும் சாந்தாப்பிள்ளை ஆகியோர்களுக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் இல்லை என்றும், மேற்படி வா.சா.ஆ.8 ஆவணம் சந்தேகத்திற்கு இடமாக இருந்து வருகிறது என்றும் எதிர்மேல்முறையீட்டாளர் / வாதி தரப்பில் வா.சா.ஆ.8 ஆவணத்தில் கண்ட சாட்சிகளை விசாரித்து தகுந்த சாட்சியத்தின் மூலம் நிரூபிக்கவில்லை என்று எடுத்துரைத்த மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதம் ஏற்கத்தகுந்ததாகவே உள்ளது. வாதி தரப்பில் வா.சா.ஆ.6, 7, 11 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆகிய ஆவணங்களிலும் வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளதை மட்டும் கருத்தில் கொண்டு வாதி கூறுவது போல் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதாக கருத முடியாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஏனெனில் வா.சா.ஆ.8 ஆவணமான 11.08.1996ம் தேதிக்கு 30 வருடங்களுக்கு முன்னரே எழுத்து மூலமான

பாகப்பிரிவினை ஆவணம் பிறப்பிக்கப்பட்டு அந்த ஆவணம் கிடைக்கப்பெறாததால் வா.சா.ஆ.6, 7, 11 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆகிய ஆவணங்களில் வாய்மொழி பாகப்பிரிவினை என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்த மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் ஏற்கத்தகுந்ததாகவே உள்ளது.

v) உண்மையில் வா.சா.ஆ.6, 7, 11 மற்றும் பி.வா.சா.ஆ.6 ஆகிய ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள படி வாய்மொழி பாகப்பிரிவினை நடந்ததா என்பது குறித்து வாதி தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்காத நிலையில் வாதி வழக்குரையில் தெரிவித்துள்ள மேற்கூறிய சங்கதி ஏற்புடையது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இந்த மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் பட்டா வழங்கப்பட்டதாக குறிப்பிடப்படும் வட்டாச்சியர் அலுவலக கோப்பு TK84/12/1410 யை பரிசீலனை செய்ததில், மேற்படி உட்பிரிவும், பட்டா மாறுதலும் RTR213/2000 ன் படி மேற்கொள்ளப்பட்டதாக தெரியவருகிறது என்றும், ஆனால் மேற்படி RTR கோப்பு ஏ.புதுக்கோட்டை கிராமத்திற்கு தொடர்புடையதாக உள்ளது என்றும், வட்டாச்சியர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதனை கொண்டு ஆய்வு செய்ததில் பட்டா மாறுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படும் கோப்பிற்கும் பட்டா மாறுதல் செய்யப்பட்ட புலம் மற்றும் கிராமத்திற்கும் எவ்வித

தொடர்பும் இல்லை என அறிய முடிகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வாதி வழக்குரை சொத்தை தெளிவான முறையில் பிராதில் தெரிவிக்கவில்லை என்று எடுத்துரைத்த மேல்முறையீட்டாளர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதம் ஏற்கத்தகுந்ததாகவே உள்ளது. எனவே மேலே கண்டவாறு விவாதத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி, 11ம் பிரதிவாதி மற்றும் சாந்தாப்பிள்ளை ஆகியோர் 11.08.1996 அன்று பாகவிஸ்தி சீட்டு எழுதிக்கொண்டதாக கூறுவது சரியல்ல என பிரச்சனை எண்.1 முடிவு செய்தும், வாதி கேட்டுள்ள விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என பிரச்சனை எண்.2 முடிவு செய்தும் மேற்கண்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்படுகிறது.

15) <u>POINT No. 3</u>

இம்மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளர் தரப்பில் 23.09.2005ம் தேதியிட்ட பெரியகுளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.70/91ல் பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்கூறிய ஆவணங்கள் குறித்து இந்த மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எவ்வித சங்கதியும் குறிப்பிட்டுக் கூறப்படவில்லை. மேலும் மேற்படி ஆவணங்கள் குறித்து விசாரணை நீதிமன்ற சாட்சிகள் விசாரணையின்போதும், எவ்வித வினாவும் எழுப்பப்படவில்லை. மேலும்

இம்மனுவுடன் இணைத்து தாக்கல் செய்யப்பட்டுள்ள 2 ஆவணங்களும் இவ்வழக்கிற்கு என்ன வகையில் தொடர்புடையன என்பது குறித்து மேல்முறையீட்டாளர் தரப்பில் எந்தவித விளக்கமும் காரணமும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவில்லை. எனவே, பிரதிவாதிகள் / மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் ஏற்றுக்கொள்ள கோரப்பட்ட ஆவணங்கள் அவர்களது வழக்கை முன்னெடுத்துச் செல்ல உதவாது, மேலும் மேல்முறையீட்டைத் தீர்மானிப்பதற்கு அவை அவசியமானவையும் அல்ல. ஆகையால், இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என பிரச்சனை எண். 3–க்கு தீர்வு காணப்படுகிறது.

16) <u>POINT No. 4</u>

மேற்கூறிய விவாதத்தின் அடிப்படையில், வாதி/எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை முறையான ஆவணங்கள் மற்றும் சான்றுகள் மூலம் நிரூபிக்கவில்லை. எனவே, இந்த மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது என பிரச்சனை எண்.4–க்கு தீர்வு காணப்படுகிறது.

17) <u>POINT No. 5</u>

பிரச்சனை எண்கள் 1 முதல் 4–க்கு மேற்கண்டவாறு தீர்வு காணப்பட்ட நிலையில் மேல்முறையீட்டாளர்களுக்கு வேறு பரிகாரங்கள்

*(AS. No.09 of 2019)*

எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து பிரச்சனை எண் 5–க்கு தீர்வு காணப்படுகிறது.

**முடிவாக, செலவுத் தொகை ஏதுமின்றி மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது; மேலும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பும் தீர்ப்பாணையும் ரத்து செய்யப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 15 ஆம் நாள் புதன்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.07.20 19:12:26 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**

**பெரியகுளம்.**

*(AS. No.09 of 2019)*

Additional District &
Sessions Court,
Periyakulam, Theni
District.
AS.No.09/2019
Fair/Draft :
Judgment.
Dated :15.07.2026